கல்கி

KALKI 29.10.1972 45காசு

முத்து மாலை

அகதா க்றிஸ்டி

COMICS PDF TIMES

"**பா**ய்ராட்! இடம் மாறினல் உங்களுக்கு நல்லது'' என்று நான் சொன்னேன்.

''உனக்கு அப்படித் தோன்றுகிறதா ?''

''ஆம்.'' என் நண்பர் புன்னகை புரிந்தார் : ''அட? அப்படியானல் எல்லாம் ஏற்பாடு ஆகிவிட்டதா ?''

''வருகிறீர்களா?''

'' என்னை எங்கே அழைத்துப் போகத் திட்டம் போட்டிருக்கிருய்?''

''பிரைடன். உண்மை என்ன தெரியுமா? எனது நண்பர் ஒருவர் எனக்கு நல்ல வருமானம் கிடைக்க வழி செய்தார்; பழமொழி சொல்வார்களே, அது போல், எரிப்பதற்கு ஏராளமான பணம் என்னிடம் இருக்கிறது. கிராண்ட் மெட்ரோபாலிடனில் வார இறுதியை ஆனந்தமாய்க் கழிக்கலாம் என்று நினைக்கிறேன்.''

''தாங்க்ஸ். நன்றியோடு ஒப்புக் கொள்கிறேன். ஒரு கிழவனின் நலம் பற்றி அக்கறை கொள்ளும் நல்ல மனம் உனக்கு இருக்கிறது; அறிவாற்றலைவிட நல்ல மனம் மதிப்புமிக்கது. ஆம், ஆம், உன்னேடு பேசுகிற நான் அதைச் சிலசமயம் மறந்து விடுகிறேன்.''

அவர் கூறியதன் உட்பொருள் எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. பாய்ராட் என் மன ஆற்றலைச் சில சமயம் குறைவாக மதிப்பிடுவார் என்று எண்ணுகிறேன். அவர் என் பிரயாணத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றதால், என்னுடைய சிறு அதிருப்தியை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''சரி, பிரயாணம் முடிவாகிவிட்டது'' என்றேன் வேகமாய்.....

சனிக்கிழமை மாலை நாங்கள் கிராண்ட் மெட்ரோபாலிடனில் உணவு அருந்திக் கொண் டிருந்தோம்.

உலகத்துச் செல்வந்தர்கள் அனைவரும் தங்கள் மனைவியரோடு பிரைட்டனில் கூடியிருப்பதாய்த் தோன்றியது. அற்புதமான வண்ண ஆடைகள்; நேர்த்தியான நகைகள், அழகுக்கு அழகு செய்யும் நோக்குடன் மட்டும் பெண்கள் நகைகள் அணிந்ததாய்த் தெரியவில்லை. பகட்டான காட்சிப் பொருள்களாகவும் அவற்றைப் பயன்படுத்தி யிருந்தார்கள். எங்கே பார்த்தாலும் கூட்டம், உல்லாசம், கேளிக்கை!

பாய்ராட் முணுமுணுத்தார்: ''ஓ, என்ன காட்சி ! இது கொள்ளை லாபக்காரர்களுக்கு ஏற்ற இடம்; இல்லையா, ஹேஸ்டிங்ஸ்?''

''இருக்கலாம். ஆனல், எல்லாவற்றிலும் கொள்ளை லாபக்காரர்களின் கைவண்ணம் இருக்காது என்று நம்புவோம்!'' என்று பதில் கூறினேன்.

பாய்ராட் சுற்றிலும் கூர்ந்து பார்த்தார் ·

அட்டைப்படக் கதை

முத்து மாலை

ஆங்கிலம்: அகதா க்ரிஸ்டி

தமிழ்: எம். வி. வி.

COMICS PDF TIMES

FIRST ON FACEBOOK & WHATSAPP

'' இந்த நகைகளின் குவியலைப் பார்த்தால் கொள்ளையடிக்கும் தொழிலில் என் மூளையைச் செலுத்தாமல், களவைக் கண்டுபிடிக்கும் தொழிலில் ஈடுபட்டோம் என்று தோன்றுகிறது. திறமையுள்ள திருடர்களுக்கு அருமையான வாய்ப்பு. ஹேஸ்டிங்ஸ், — தூணுக்கு அருகில் உள்ள அந்தப் பருத்த ஸ்திரீயைப் பார்; மணி மாணிக்கங்களில் மறைந்து கிடக்கிறாள்.''

அவருடைய கண்களைப் பின்பற்றினேன்.

''அட, மிஸஸ் ஒபல்சன்!''

''உனக்கு அவளைத் தெரியுமா?''

''கொஞ்சம் தெரியும்'' என்றேன். ''அவளுடைய கணவர் பெரிய ஸ்டாக் புரோக்கர். சமீபத்தில் எண்ணெய் விலை ஏறியதல்லவா? அதிலே, இவருக்குக் கொழுத்த பணம்.''

சாப்பாட்டுக்குப் பிறகு ஓய்வறையில் நாங்கள் ஒபல்சன் தம்பதிகளைச் சந்தித்தோம். பைரட்டை நான் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தபின், எல்லோரும் சேர்ந்து காப்பி குடித்தோம்.

மிஸஸ் ஒபல்சன் பரந்த மார்பில் அணிந்திருந்த விலையுயர்ந்த வைரங்களைப் பைரட் பாராட்டிப் பேசியதைக் கேட்டு அவளுடைய முகம் பிரகாசித்தது.

'' எனக்கு இது பொழுதுபோக்கு, மிஸ்டர் பாய்ராட்! நகைகள் என்றால் எனக்கு மோகம். என் கணவருக்கு எனது இந்தப் பலவீனம் தெரியும். அவருக்கு வர்த்தகத்தில் வெற்றி கிட்டும்போதெல்லாம் எனக்காகப் புதிதாய் ஏதாவது வாங்கி வந்து

தருவார். விலை உயர்ந்த கற்கள் உங்களுக்கும் பிடிக்குமா ?''

''அவ்வப்போது அவற்றோடு பழக எனக்கு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. உலகப் புகழ்பெற்ற சில நகைகளோடு என் தொழில் காரணமாகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது.''

மிகவும் நாசுக்காக உண்மைப் பெயர்களை மறைத்து, ஓர் அரச குடும்பத்தின் வரலாற்றுப் புகழ் படைத்த சில நகைகளைப் பற்றிப் பைரட் விவரித்தார்; மிஸஸ் ஒபல்சன் மூச்சு விடவும் மறந்தவளாய் அதைக் கேட்டாள்.

அவர் முடித்ததும், ''ஒரு நாடகம் போலவே இருக்கிறதே ? என்னிடம் சில முத்துக்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஒரு வரலாறு உண்டு. உலகத்தில் உள்ள மிகச் சிறந்த முத்துமாலைகளில் அது ஒன்று என்று கூறுகிறார்கள்; தூய நிறமும், பாந்தமான இணைப்பும் அதன் பெருமைகள்; ஓடிப் போய்க் கொண்டு வருகிறேன்'' என்றாள் மிஸஸ் ஒபல்சன்.

''வேண்டாம், மாடம், வீண் சிரமம் எதற்கு? நீங்கள் என்னிடம் மிகவும் அன்பு காட்டுகிறீர்கள்'' என்றார் பாய்ராட்.

''நீங்கள் அதைப் பார்க்க வேண்டும்.''

அந்தக் கனமான சீமாட்டி மிகச் சுறுசுறுப்பாக லிப்டுக்கு விரைந்தாள். என்னோடு பேசிக் கொண்டிருந்த அவளுடைய கணவர், பாய்ராட்டைக் கேள்விக் குறியோடு பார்த்தார்.

''மாடமுக்கு என்னிடம் மிகவும் பிரியம் உண்டாகி விட்டது; அவளுடைய முத்து மாலையை என்னிடம் காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறாள்'' என்று பாய்ராட் விளக்கினார்.

''முத்துக்களா?'' என்று ஒபல்சன் திருப்தியுடன் புன்னகை செய்தார். ''அவை பார்க்கத் தக்கவைதாம். நிறையப் பணம் விழுங்கின ; ஆனால் போட்ட பணத்துக்கு மோசமில்லை; எப்போது வேண்டுமானாலும் அதைப் பணமாக்க முடியும் — லாபத்தோடு விற்கலாம். இப்போதுள்ள பொருளாதார நிலைமை நீடித்தால் அதை விற்க நேர்ந்தாலும் நேரலாம். ஊரிலே அவ்வளவு பண நெருக்கடி.'' — அவர் பொருளாதாரப் பரிபாஷையில் பேசிக் கொண்டே போனார். எனக்குப் புரியவில்லை.

ஒரு வேலைக்காரப் பையன் அவருடைய பேச்சில் குறுக்கிட்டு, அவர் காதுகளில் ஏதோ கூறினான்.

''அட, என்னது? நான் உடனே வருகிறேன். அவள் உடம்புக்கு ஒன்றும் இல்லையே?.... எக்ஸ்க்யூஸ் மீ'' என்று எங்களிடம் சொல்லிக் கொண்டே அவர் எழுந்து சென்று விட்டார்.

பாய்ராட் பின்னால் சாய்ந்து கொண்டு, தம்முடைய சிறிய சிகரெட்டுகளில் ஒன்றைப் பற்ற வைத்தார். பிறகு அவர் ஓர் அலட்சிய பாவத்துடன் காப்பிக் கிண்ணங்களை வரிசையாக அடுக்கினார்; அந்த வரிசையைப் பார்த்து மகிழ்ந்து கொண்டார்.

நிமிடங்கள் போயின. ஒபல்சன்கள் திரும்பி வரவில்லை.

''எப்போது வரப் போகிறார்களோ?'' என்றேன் கடைசியில்.

பாய்ராட் சுருள் சுருளாக மேலேறும் புகையைப் பார்த்தவாறு, யோசனையில் ஆழ்ந்தவராய்க் கூறினார் : ''அவர்கள் வரமாட்டார்கள்.''

''ஏன்?''

''ஏனென்றால், ஏதோ நடந்திருக்கிறது.''

''என்ன நடந்திருக்கும் ? உங்களுக்கு எப்படித் தெரியும்?'' — என்றேன் ஆர்வத்தோடு.

பாய்ராட் புன்னகை புரிந்தார்.

''சில விநாடிகளுக்கு முன்னால் மானேஜர் அவசரம் அவசரமாய்த் தம் ஆபீசிலிருந்து வெளியே வந்து மாடிக்கு ஓடினார். அவர் ஒரே பரபரப்பாக இருந்தார். லிப்ட் பையன், ஒரு வேலைக்காரப் பையனுடன் மெய்ம்மறந்து பேசுகிறான்; லிப்ட் மணி மூன்று தடவைகள் ஒலித்ததுகூட அவன் காதில் விழவில்லை. மூன்றாவதாக வெய்டர்கள்கூட நிலைகுலைந்திருக்கிறார்கள். வெய்டர்களே நிலைகுலைந்திருக்கிறார் என்றால்...?'' பாய்ராட் தீர்மானமாய்த் தலை அசைத்துக் கூறினார்: ''பெரிய விவகாரமாகத்தான் இருக்க வேண்டும்... நான் சொன்னது சரிதான்... போலீஸ்காரர்கள் வருகிறார்கள்.''

இரண்டு பேர் அப்போதுதான் ஹோட்டலில் நுழைந்திருந்தார்கள்; ஒருவன் போலீஸ் உடுப்பிலும், மற்றவன் சாதா உடுப்பிலும். அவர்கள் ஒரு வேலைக்காரனோடு பேசினார்கள். உடனே லிப்டில் மாடிக்குச் சென்றார்கள்.

சில நிமிடங்களில் முன்பு வந்த அதே பையன் எங்களிடம் வந்தான்.

''மிஸ்டர் ஒபல்சன் உங்களை மாடிக்கு வரும்படி கேட்டுக் கொள்கிறார்.''

பாய்ராட் துள்ளி எழுந்தார், அழைப்புக்காகக் காத்திருந்தவர்போல். நானும் அவரைத் தொடர்ந்தேன்.

ஒபல்சனின் அறைகள் முதல் மாடியில் இருந்தன. கதவைத் தட்டிவிட்டுப் பணியாள் போய் விட்டான். ''உள்ளே வாருங்கள் !'' என்ற குரலுக்கு நாங்கள் பணிந்தோம்.

உள்ளே ஒரு விசித்திரமான காட்சியைக் கண்டோம். அது மிஸஸ் ஒபல்சனின் படுக்கை அறை ; அதன் நடுவில் இருந்த சாய்வு நாற்காலியில் அந்தச் சீமாட்டி பலமாய் அழுதவாறு கிடந்தாள். அவளுடைய முகத்தின் ஆழமான பவுடர் மெருகைக் கண்ணீர் கிறல் கிறலாய்க் கலைத்திருந்தது.

ஒபல்சன் சினமாய் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தார். இரண்டு போலீஸ்காரர்களும் அறை நடுவில் நின்றார்கள்; ஒருவன் கையில் ஒரு நோட்டுப் புத்தகம் இருந்தது.

ஹோட்டல் பணிப்பெண் ஒருத்தி கணப்பு அருகில் கிலிபிடித்து நின்றாள். மறு பக்கம், ஒரு பிரஞ்சுக்காரி; மிஸஸ் ஒபல்சனின் வேலைக்காரி என்று பார்த்ததும் தெரிந்தது; அழுது கொண்டும், கைகளை முறுக்கிக் கொண்டும் நின்றாள். அவளுடைய வருத்தத்தை எஜமானியின் வருத்தத்துக்குத்தான் ஈடாகச் சொல்ல முடியும்.

இந்தக் குழப்பத்தில் அடி வைத்தார் பாய்ராட். உடனே, இந்தப் பருமனில் இவ்வளவு வேகம் சாத்தியமா என்று வியக்கும்படியாக, மிஸஸ் ஒபல்சன் நாற்காலியிலிருந்து தாவி எழுந்தாள்.

'' ஆகா ! எட். என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்'' என்று தன் கணவனைக் குறித்துச் சொன்னவள், தொடர்ந்து, ''எனக்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை இருக்கிறது. இன்று மாலை நான் உங்களை இந்த மாதிரி சந்திக்க வேண்டும் என்று விதி. என்னுடைய முத்துக்களை நீங்கள் மீட்டுத் தர முடியவில்லை என்றால், வேறு யாராலும் முடியாது'' என்றாள் பாய்ராடை நோக்கி.

''மாடம்! அமைதியாயிருங்கள்'' என்று பாய்ராட் அவளுடைய கையை ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தார்: ''கவலைப்படாதீர்கள். எல்லாம் சரியாகும்.''

ஓபல்சன் போலீஸ் இன்ஸ்பெக்டரின் பக்கமாகத் திரும்பினார்.

''இந்தக் கனவான் இருப்பதைப் பற்றி...ம் ...இம்... உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?''

''ஒன்றும் இல்லை, சார்'' என்றார் இன்ஸ்பெக்டர் பணிவாக. கூடவே அலட்சியமாக, ''மிஸஸ் ஒபல்சன் இப்போது விவரங்களைச் சொல்லும் நிலைமையில் இருக்கிறார் என்று நம்புகிறேன்'' என்றார்.

மிஸஸ் ஓபல்சன், உதவி வேண்டுகிறவள் போல் பாய்ராடை நோக்கினாள். அவர் அவளை நாற்காலிக்கே திரும்பவும் அழைத்துச் சென்றார்.

'' உட்காருங்கள், மாடம். நடந்ததை முழுதும் படபடப்பு இல்லாமல் நிதானமாய்ச் சொல்லுங்கள்.''

இவ்வாறு தேற்றப்பட்டதும் அவள் விறு விறுப்பாய்க் கண்களைத் துடைத்துக் கொண்டு தொடங்கினாள்:

'' சாப்பிட்ட பிறகு, மிஸ்டர் பாய்ராட்டுக்கு முத்துக்களைக் காட்ட விரும்பிய நான் மாடிக்கு வந்தேன். அறை வேலைக்காரியும், செலஸ்டினும் வழக்கப்படி இங்கே இருந்தார்கள்......''

''எக்ஸ்க்யூஸ் மீ, மாடம். 'வழக்கப்படி' என்கிறீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?''

ஓபல்சன் விளக்கினார்:

''நம் வேலைக்காரி செலஸ்டின் இல்லாத போது, அறைக்குள் வேறு யாரும் வரக் கூடாது என்று நான் ஒரு 'ரூல்' வைத்திருக்கிறேன். செலஸ்டின் இருக்கும் போதுதான் ஹோட்டல் வேலைக்காரி காலையில் அறையைச் சுத்தம் செய்வாள். பிற்பகலில் படுக்கைகளை மாற்றிப் போடும்போதும் அப்படித்தான். செலஸ்டின் இல்லாவிட்டால் அவள் அறையில் நுழையவே மாட்டாள்.''

''ஆம்'' என்று மிஸஸ் ஒபல்சன் தொடர்ந்தாள். ''நான் மாடிக்கு வந்ததாய்ச் சொன்னேனா? நான் இதோ, இந்த டிராயருக்குப் போனேன்'' என்று அவள் அலங்கார மேஜையின் வலது பக்கத்து அடி டிராயரைக் காட்டினாள். '' நகைப் பெட்டியை எடுத்துப் பூட்டைத் திறந்தேன். அது என்னவோ வழக்கம் போலவே இருப்பதாய்த் தோன்றியது. ஆனால் முத்துக்கள் அதில் இல்லை!''

இன்ஸ்பெக்டர் நோட்டில் வேகமாக எழுதிக் கொண்டிருந்தார்.

''கடைசியாக அவைகளை எப்போது பார்த்தீர்கள்?'' என்று அவர் கேட்டார்.

''நான் சாப்பிடப் போனபோது அவை அதில் இருந்தன.''



'' நிச்சயமாய் உங்களுக்குத் தெரியுமா?''

'' தெரியும். முத்துக்களை அணியலாமா வேண்டாமா என்று யோசித்தேன். கடைசியில் மரகதங்களை அணிவதென்று முடிவு செய்தேன். முத்துக்களை மறுபடியும் பெட்டியில் வைத்தேன்.''

''நகைப்பெட்டியை யார் பூட்டினார்கள்?''

COMICS PDF TIMES

''நான் பூட்டினேன். கழுத்தில் உள்ள செயினில் சாவியைக் கோத்துக் கொள்வது என் வழக்கம்'' என்னும்போது அவள் செயினைத் தூக்கிக் காட்டினாள்.

அதைச் சோதித்த இன்ஸ்பெக்டர் தோள்களைக் குலுக்கினார்.

''திருடனிடம் மறு சாவி இருந்திருக்க வேண்டும். கஷ்டமான வேலை இல்லை. சாதாரணப் பூட்டு. நகைப் பெட்டியைப் பூட்டிய பிறகு என்ன செய்தீர்கள்?''

''அதைக் கீழ் டிராயரில் வைத்தேன். எப்போதும் அங்கே வைப்பது வழக்கம்.''

''டிராயரைப் பூட்டவில்லையா?''

''இல்லை; பூட்டும் வழக்கம் இல்லை. என் வேலைக்காரி நான் வரும் வரையில் அறையிலேயே இருப்பாள். ஆகையால், பூட்டத் தேவை இல்லை.''

இன்ஸ்பெக்டரின் முக பாவம் ஆழ்ந்தது.

''சாப்பிடுவதற்காக நீங்கள் கீழே போனபோது முத்துக்கள் இங்கே இருந்தன. அதற்குப் பிறகு வேலைக்காரி அறையை விட்டு வெளியே போகவில்லை என்று சொல்கிறீர்கள், இல்லையா ?''

தன்னுடைய பயங்கரமான நிலைமையை அப்போதுதான் உணர்ந்தவள்போல், செலஸ்டின் வீறிட்டு அலறினாள். பாய்ராட்டின் தோள்களைப் பற்றிக்கொண்டு பிரஞ்சு மொழியில் ஏதோ பொழிந்து தள்ளினாள். அதன் சாராம்சம் இதுதான் :

அவள் எஜமானியிடம் திருடியதாய்ச் சந்தேகப்படுவது மகா கேவலம் ! போலீஸ்காரர்கள் நம்ப முடியாத முட்டாள்தனத்துக்காகப் புகழ் பெற்றவர்கள்! ஆனால் இவர் (பாய்ராட்) ஒரு பிரஞ்சுக்காரராக இருப்பதால்....

''பெல்ஜியன்'' என்று பாய்ராட் திருத்தியதை செலஸ்டின் கவனிக்கவில்லை.

இந்தப் பிரஞ்சுக்காரர் அவள் மீது பொய்யாகக் குற்றம் சுமத்தப்படுவதையும், ஹோட்டல் வேலைக்காரி எளிதாகத் தப்புவதையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கக் கூடாது. அவள், அந்தச் செவப்பு 'முகரக் கட்டை'யை ஒரு நாளும் நம்பியதில்லை. அந்த வேலைக்காரி பிறவித் திருடி. அவளை நாணயம் இல்லாதவள் என்று செலஸ்டினுக்கு ஆரம்பத்திலிருந்தே தெரியும். அதனால் அவள் அறையில் வேலை செய்யும்பொழுது அவள் மேல் செலஸ்டின் ஒரு கண் வைத்திருப்பாள். போலீஸ் முட்டாள்கள் அவளைச் சோதனை போட்டால், எஜமானியின் நகை கட்டாயம் கிடைக்கும் !

வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த பிரஞ்சுக் கொச்சையில் செலஸ்டின் சொல்மாரி பெய்தாலும், கைகால்களை ஆட்டியும் ஜாடை காட்டியும் அவள் அதை எல்லோருக்கும் விளங்கும்படி செய்து விட்டாள். அறை வேலைக்காரிக்கு முழுதும் புரியாவிட்டாலும், புரிய வேண்டிய அளவு புரிந்துவிட்டது. அவள் முகம் சினத்தால் சிவந்தது.

''அந்த வெளிநாட்டுக்காரி நான் முத்துக்களை எடுத்தேன் என்றா சொல்கிறாள்? அது சுத்தப் பொய்!'' என்றாள் அவள் கொதிப்புடன். ''நான் அவற்றைப் பார்த்தது கூட இல்லை !''

''அவளைச் சோதனை செய்யுங்கள்!'' என்று கத்தினாள் மற்றவள். ''நான் சொல்வது போல் அவளிடமே நகை இருக்கும் !''

''நீ ஒரு மோசக்காரி! பூசை கேட்கிறதா?'' என்றவாறு அறைப் பணிப் பெண் முன் நகர்ந்தாள். ''நீயே திருடிவிட்டு என் மேல் பழி போடுகிறாயா? அம்மா வருவதற்கு முன்னாலே நான் மூன்று நிமிடங்கள்தான் அறையில் இருந்தேன். நீ இந்த இடத்தைவிட்டு அசையவில்லை. பூனை எலியைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டுதானே இருந்தாய்?''

இன்ஸ்பெக்டர் செலஸ்டினைச் சந்தேகத்தோடு பார்த்தார். ''மெய்தானா? அறையை விட்டு நீ வெளியே போகவில்லையா?''

''நான் அவளைத் தனியாக விட்டு விட்டுப் போகவில்லை'' என்றாள் செலஸ்டின், அரை மனத்துடன். ''ஆனால் இந்தக் கதவு வழியாக இரண்டு தடவைகள் என் அறைக்குப் போனேன். பஞ்சுச் சுருள் கொண்டு வருவதற்காக ஒரு தடவை; கத்திரிக்கோலுக்காக இன்னொரு தடவை. அந்தச் சமயத்தில் அவள் எடுத்திருக்க வேண்டும்.''

அறை வேலைக்காரி ஆத்திரத்துடன் மறுமொழி கூறினாள்: ''நீ ஒரு நிமிடம்கூட உள்ளே இருக்கவில்லை. அந்தப் பக்கம் தலை நீட்டி விட்டு உடனே திரும்பி விட்டாய். போலீஸ் என்னைச் சோதனை செய்யட்டும்; தாராளமாய்ச் செய்யட்டும். எனக்குப் பயம் இல்லை.''

இச்சமயம் யாரோ கதவைத் தட்டினார்கள். இன்ஸ்பெக்டர் அங்கே போனார். யார் என்று பார்த்ததும் அவருடைய முகம் ஒளி கொண்டது.

''நல்ல வேளை! நம் பெண் சோதனையாள் ஒருத்தியை அனுப்பச் சொன்னேன். அவள் வந்திருக்கிறாள். பக்கத்து அறைக்குள் போகிறாயா ?'' என்று அவர் அறை வேலைக்காரியை நோக்கினார்.

அவள் தலையைச் சற்றுக் குலுக்கிவிட்டுப் பக்கத்து அறைக்குள் போனாள், சோதனைக்காரி பின்தொடர.

பிரஞ்சுப் பெண் தேம்பியவாறு ஒரு நாற்காலியில் விழுந்துவிட்டாள்.

பாய்ராட் அறை அமைப்பைக் கண்ணோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். அதை ஒரு வரை படமாகக் கீழே தருகிறேன்:



''அந்தக் கதவு எங்கே போகிறது?'' என்று பாய்ராட் ஜன்னலருகில் இருந்த கதவைச் சுட்டிக்காட்டினார்.

''அடுத்த அறைக்கு என்று நினைக்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர். ''ஆனால், இந்தப் பக்கம் தாழிடப்பட்டிருக்கிறது.''

பாய்ராட் அதன் அருகில் போனார். தாழை இழுத்துத் தள்ளிச் சோதித்துப் பார்த்தார்.

''அந்தப் பக்கமும் தாழிடப்பட்டிருக்கிறது. சரி, அது இல்லை என்றாகிவிட்டது.''

அவர் ஜன்னல்கள் ஒவ்வொன்றாய்ச் சோதனை செய்தார். ''இங்கும் ஒன்றுமில்லை. வெளிப் பக்கம் ஒரு பால்கனிகூட இல்லை.''

''இருந்தாலும் என்ன? வேலைக்காரி அறையை விட்டு வெளியே போகவே இல்லையே?'' என்றார் இன்ஸ்பெக்டர் பொறுமை இழந்து.

பாய்ராட் சிறிதும் தயங்கவில்லை. ''அறையை விட்டு வெளியே போகவில்லை என்று இந்தப் பெண் உறுதியாகச் சொல்வதால்...''

அவர் முடிக்குமுன் அறை வேலைக்காரியும் பெண் போலீஸ் சோதனைக்காரியும் திரும்பி விட்டார்கள்.

''ஒன்றுமில்லை'' என்றாள் போலீஸ்காரி, சுருக்கமாக.

''எப்படி இருக்கும்?'' என்றாள் வேலைக்காரி நிதானமாக. ''ஒரு நாணயமான பெண்ணின் பெயரைக் கெடுத்த பிரஞ்சுப் பெண் தலை குனிய வேண்டும்!''

''சரி, சரி, நிறுத்து!'' என்றார் இன்ஸ்பெக்டர். ''யாருக்கும் உன் மேல் சந்தேகம் இல்லை. நீ போய் உன் வேலையைக் கவனி.''

அறை வேலைக்காரி மனமின்றிப் போனாள்.

''அவளைச் சோதிக்க வேண்டுமா?'' என்று பெண் போலீஸ் செலஸ்டினைக் காட்டினாள்.

''ஆம், ஆம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

செலஸ்டின் போலீஸ் அதிகாரியோடு சிறு அறைக்குள் போனாள். அவளிடமும் ஒன்றும் காணப்படவில்லை.

இன்ஸ்பெக்டரின் முகம் கடுமை பெற்றது. ''நீ என்னோடு வரவேண்டியதுதான் மிஸ்'' என்றார். பின்னர், மிஸஸ் ஒபல்சனைப் பார்த்தார்: ''சாட்சியங்கள் எல்லாம் அப்படி இருக்கின்றன. அவள் நகையைத் தன் உடலில் ஒளித்து வைக்கவில்லை என்றால் அறையில் எங்காவது பதுக்கியிருப்பாள்.''

செலஸ்டின் மீண்டும் வீறிட்டு அலறினாள். பாய்ராட்டின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். அவள் காதில் அவர் மெல்ல ஏதோ கூறினார். அவள் நிமிர்ந்து அவரை ஐயத்துடன் பார்த்தாள்.

அவளிடம், ''குழந்தாய்! எதிர்க்காமல் இருப்பதே நல்லது'' என்ற பைரட் இன்ஸ்பெக்டரிடம், ''ஒரு சின்ன சோதனை; என் திருப்திக்காக. அனுமதிப்பீர்களா?'' என்று கேட்டார்.

''என்ன செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது'' என்றார் போலீஸ் அதிகாரி, பட்டுக் கொள்ளாமல்.

பாய்ராட் செலஸ்டின் பக்கம் திரும்பினார்.

''செலஸ்டின்! பஞ்சுச் சுருள் கொண்டு வருவதற்காக, உன் அறைக்குள் போனதாகச் சொன்னாய். அது எங்கே இருந்தது?''

''அடுக்குடிராயர்பெட்டிக்கு மேலே சார்!''

''கத்திரிக்கோல்?''

''அதுவும்.''

''அதே வேலைகளை மறுபடியும் இப்போது செய்யச் சொன்னால், தொந்தரவாக நினைக்க மாட்டாயே? நீ இங்கேதானே உட்கார்ந்திருந்ததாகச் சொன்னாய்?''

செலஸ்டின் உட்கார்ந்தாள். பாய்ராட் ஜாடை காட்டியதும், பக்கத்து அறைக்குப் போய், அடுக்கு டிராயர் பெட்டியின் மீது இருந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

அவளுடைய நடையையும், தம் உள்ளங் கையில் இருந்த பெரிய கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தார் பாய்ராட்.

''இன்னொரு முறை, செலஸ்டின்!''

இரண்டாவது முறை அவள் அவ்வாறு செய்து முடித்த பிறகு, தம் பாக்கெட் நோட்டில் அவர் ஏதோ குறித்துக் கொண்டார். கடிகாரத்தைத் தம் பையில் திரும்பவும் வைத்துக் கொண்டார்.

''தாங்க்ஸ், செலஸ்டின்.... எனக்குக் காட்டிய மரியாதைக்காக உங்களுக்கும் நன்றி!'' என்றார் இன்ஸ்பெக்டரை நோக்கி.

இந்த அதிகப்படி வினயம் இன்ஸ்பெக்டருக்கு வேடிக்கையாக இருந்தது. கண்ணீர் வெள்ளத்துக்கிடையில் செலஸ்டின் போலீஸ்காரியுடனும், சாதா உடுப்புப் போலீஸ்காரரோடும் புறப்பட்டாள்.

அப்பால் மிஸஸ் ஒபல்சனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இன்ஸ்பெக்டர் அறை முழுவதையும் சூறையாடி விட்டார். டிராயர்களை வெளியே இழுத்தார். கப்போர்டுகளைத் திறந்து போட்டார். படுக்கைகளைக் கலைத்தார். தரையெல்லாம் தட்டிப் பார்த்தார். ஒபல்சன் சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

''அவை கிடைக்கும் என்று நிசமாய் நீங்கள் நினைக்கிறீர்களா?''

''ஆம், அதுதான் அறிவுக்குப் பொருத்தமானயோசனை. அறைக்கு வெளியே அவைகளை எடுத்துக் கொண்டு போக அவளுக்கு நேரம் இல்லை. மிஸஸ் ஒபல்சன் இவ்வளவு சீக்கிரம் அவை காணாமல் போனதைக் கண்டு பிடிப்பாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவளுடைய திட்டம் குலைந்துவிட்டது. அவை கட்டாயம் இங்கேயே இருக்க வேண்டும். இரண்டு பேரில் ஒருவர் அவைகளை மறைத்து வைத்திருக்க வேண்டும் — அறை வேலைக்காரி செய்திருப்பாள் என்று தோன்றவில்லை.''

''தோன்றவில்லை என்ன, முடியவே முடியாத காரியம்!'' என்றார் பாய்ராட் அமைதியாக.

''உம்?'' என்று இன்ஸ்பெக்டர் விழித்தார்.

பாய்ராட் அடக்கமாய்ப் புன்னகை செய்தார்.

''நான் செய்து காட்டுகிறேன். ஹேஸ்டிங்ஸ், என் நல்ல நண்பா, என் கடிகாரத்தைக் கையில் வைத்துக் கொள். ஜாக்கிரதையாக வைத்துக் கொள். இது பரம்பரை ஞாபகச் சின்னம்! கொஞ்ச நேரத்

''அமீன வீட்டைக் காலி பண்ணச் சொல்வார்; இந்த அமீனே நாட்டையே காலி பண்ணச் சொல்கிறாரே!''

துக்கு முந்தி, நான் செலஸ்டினுடைய நடமாட்டத்தின் நேரத்தைக் கணித்தேன். முதலில் அவள் அறைக்கு வெளியே பன்னிரண்டு விநாடிகள் இருந்தாள். இரண்டாவது தடவை பதினைந்து விநாடிகள் இருந்தாள். இப்போது நான் செய்வதைக் கவனியுங்கள். மிஸஸ் ஓபல்சன்! தயவுசெய்து உங்கள் நகைப்பெட்டியின் சாவியைத் தருகிறீர்களா ? சரி, தாங்க்ஸ். என் நண்பன் ஹேஸ்டிங்க்ஸ். அன்பு கூர்ந்து 'போ' என்று சொல்வான்.''

''போ'' என்றேன் நான்.

நம்ப முடியாத வேகத்துடன் பாய்ராட் அலங்கார மேஜை டிராயரை இழுத்துத் திறந்தார், நகைப்பெட்டியை எடுத்தார், சாவியைப் பூட்டில் இட்டார், ஒரு நகையை எடுத்துக் கொண்டார், பெட்டியை மூடிப் பூட்டினார். அதை மீண்டும் டிராயரில் வைத்தார், டிராயரை முன்போல் உள்ளே தள்ளிவிட்டார். மின்னல் வேகத்தில் எல்லாம் நடந்தன.

''என்னது, நண்பா'' என்றார் அவர், மூச்சு விடாமல்.

''நாற்பத்தாறு வினாடிகள்'' என்று பதில் சொன்னேன்.

''பார்த்தீர்களா?'' என்று அவர் சுற்றிலும் பார்த்தார். ''அறை வேலைக்காரிக்கு நெக்லேஸை எடுக்கவே நேரம் இல்லை. ஒளிக்க எங்கே போவாள் ?''

''ஆக, செலஸ்டின்தான் செய்திருக்கவேண்டும் என்றாகிறது'' என்ற இன்ஸ்பெக்டர் திருப்தியுடன் தம் தேட்டத்தைத் தொடர்ந்தார். அவர் அடுத்திருந்த செலஸ்டினின் படுக்கை அறைக்குப் போனார்.

பாய்ராட் யோசனையில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று ஓபல்சனை நோக்கி ஒரு கேள்வியை எய்தார்.

''இந்த நெக்லேஸ் சந்தேகமின்றி இன்ஷ்யூர் செய்யப்பட்டதுதானே?''

இந்தக் கேள்வி கேட்டு ஓபல்சன் சற்று வியப்புற்றார்.

தயக்கத்துடன், ''ஆமாம்'' என்றார்.

''ஆனால், அதனால் என்ன பயன்?'' என்று குறுக்கிட்டாள் மிஸஸ். ஓபல்சன், கண்ணீருடன். ''எனக்கு என் நெக்லேஸ்தான் வேண்டும். அது அற்புதமானது. எவ்வளவு பணம் கொட்டினாலும் அதற்கு ஈடாகாது!''

''எனக்குப் புரிகிறது, மாடம். எனக்கு நன்றாகப் புரிகிறது. பெண்களுக்கு உணர்ச்சி பிரதானம், இல்லையா? ஆனால் மிஸ்டர் ஓபல்சனுக்கு நஷ்டஈடு கிடைக்கும் என்பதால் கொஞ்சம் ஆறுதல் உண்டாகும்.''

''உண்மை, உண்மை, ஆயினும்...'' என்று ஓபல்சன் இழுத்தார்.

அப்போது இன்ஸ்பெக்டரின் வெற்றி முழக்கம் கேட்டது. விரல்களுக்கு இடையில் ஏதோ தொங்க விட்டுக் கொண்டு அவர் வந்தார்.

கிரீச்சிட்டவாறு மிஸஸ் ஓபல்சன் நாற்காலியிலிருந்து தாவினாள். அவள் முற்றிலும் புதியவளாக மாறிவிட்டாள்.

''ஓ! என் நெக்லேஸ்!''

அதை இரண்டு கைகளிலும் ஏந்தி மார்போடு அணைத்துக் கொண்டாள். நாங்கள் அவளைச் சுற்றிக் கொண்டோம்.

''இது எங்கே இருந்தது?'' என்று கேட்டார் ஓபல்சன்.

''செலஸ்டினின் படுக்கையில். ஸ்பிரிங் கம்பிகளுக்கு இடையில். அறை வேலைக்காரி வருமுன்பே அவள் அதைத் திருடி அங்கே ஒளித்து வைத்திருக்க வேண்டும்.''

''கொஞ்சம் அனுமதிக்கிறீர்களா மாடம்?'' என்று மௌனமாகக் கூறிய பாய்ராட் அவளுடைய கையிலிருந்த நெக்லேஸை வாங்கி, கூர்ந்து பார்த்துவிட்டுப் பணிவாய்க் குனிந்து அவளிடம் திருப்பித் தந்தார்.

''இப்போதைக்கு இதை நீங்கள் எங்களிடமே கொடுத்துவிட வேண்டும். குற்றம் சாட்ட இது தேவைப்படும். ஆனால் விரைவில் திருப்பிக் கொடுத்து விடுகிறோம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஓபல்சன் சற்றுப் பொறுமை இழந்து, ''அது அவசியம்தானா?'' என்றார்.

''ஆம், சார்; அது விதிமுறை.''

''எட், அவரே அதை எடுத்துக் கொள்ளட்டும். அது பத்திரமாக இருக்கிறது என்று எனக்கு நம்பிக்கை உண்டாகும்'' என்று கத்தினாள் மிஸஸ் ஓபல்ஸன். ''மறுபடியும் யாராவது அதைத் திருட முயல்வார்களோ என்ற அச்சத்தில் எனக்குத் தூக்கமே வராது. அந்தப் பாவிப் பெண்! அவள் இப்படிச் செய்வாள் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை!''

என் கையை மெல்ல அழுத்தினார் பாய்ராட்.

''நாம் நழுவுவோமா, நண்பா? நம் சேவை இனி இங்கே தேவையில்லை.''

ஆயினும் வெளியே வந்ததும் அவர் தயங்கினார். பிறகு நான் வியப்புற அவர் கூறினார்:

''பக்கத்து அறையை நான் பார்க்க விரும்புகிறேன்.''

அந்த அறைக் கதவு பூட்டியிராததால் நாங்கள் உள்ளே நுழைந்தோம். அது ஒரு பெரிய 'டபிள்' அறை; அங்கே யாருமில்லை. எங்கும் ஒரே தூசிமயமாய் இருந்தது. ஜன்னலுக்கு அருகில் இருந்த ஒரு மேஜை மேலிருந்த ஒரு சதுரமான குறியைச் சுற்றித் தூசின்ய விரல்களால் தொடும்போது தொட்டாற்சுருங்கியான என் நண்பரின் முகம் கோணியது.

''இங்கே சேவை தேவை'' என்றார் அவர்.

அவர் யோசனையில் ஆழ்ந்தவராய் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

''நாம் இங்கே ஏன் வந்தோம்?'' என்றேன் பொறுமை இழந்து.

அவர் துணுக்குற்றார்.

''நண்பா! மன்னிக்க வேண்டும். இந்தப் பக்கமும் கதவு உண்மையாகத் தாழிடப் பட்டிருந்ததா என்று பார்க்க விரும்பினேன்.''

''உம்'' என்று நான் அப்போதுதான் நாங்கள் வெளிவந்த அறையோடு சம்பந்தப் பட்ட கதவைப் பார்த்தேன். ''இது தாழிடப்பட்டிருக்கிறதே!''

பாய்ராட் தலையசைத்தார். அவர் இன்னும் யோசித்தபடி இருந்தார்.

''எப்படி இருந்தால் என்ன? கேஸ் முடிந்து விட்டது. உங்களுக்கு இதைவிட அதிக வாய்ப்புக் கிடைத்திருக்க வேண்டும், உங்கள் ஆற்றலைக் காட்ட. ஆனால் இது ஒரு சிறிய கேஸ்; அந்த வடிகட்டின முட்டாள் இன்ஸ்பெக்டர்கூடச் சுலபமாக முடிவு கண்டு விட்டார்.''

பாய்ராட் தலை ஆட்டினார்.

''கேஸ் இன்னும் முடியவில்லை நண்பா. முத்துக்களை யார் களவாடினார்கள் என்று நாம் கண்டு பிடிக்கும்வரையில் அது முடியவும் முடியாது.''

''வேலைக்காரி செலஸ்டின்தான் திருடினாள் என்றாகி விட்டதே.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''ஏன்? முத்துமாலை அவளுடைய கட்டிலில் கண்டுபிடிக்கப்பட்டதே!''

''அடா, டா, டா'' என்றார் பாய்ராட் பொறுமை இழந்து: ''அவை முத்துக்கள் அல்ல.''

''என்னது?''

''போலி! இமிடேஷன் நண்பா!''

அதைக் கேட்டதும் எனக்கு மூச்சு நின்று விடும்போல் இருந்தது. பாய்ராட் அமைதியாகப் புன்னகை செய்து கொண்டிருந்தார்.

''அந்த அப்பாவி இன்ஸ்பெக்டருக்கு நகைகளைப் பற்றி ஒன்றும் தெரியாது என்பது தெளிவு. ஆனால் இப்போது ஒரு ரகளை நடக்கப் போகிறது, பார்.''

''வாருங்கள்!'' என்று அவர் கையைப் பிடித்து இழுத்தேன்.

''எங்கே?''

''ஒபல்சன் தம்பதிகளிடம் நாம் உடனே அதைச் சொல்ல வேண்டும்.''

''நான் வேண்டாம் என்று நினைக்கிறேன்.''

''ஆனால் பாவம், மிஸஸ் ஒபல்சன்...''

''நகை பத்திரமாக இருக்கிறது என்ற எண்ணத்தில் அமைதியாகத் தூங்குவாள்.''

''ஆனால், திருடியவன் நகையோடு தப்பி விட்டால்?''

''நண்பா! வழக்கம் போல் யோசனை இல்லாமல் பேசுகிறாய். மிஸஸ் ஒபல்சன் இன்று மாலை மிகவும் ஜாக்கிரதையாகப் பூட்டி வைத்த முத்துக்கள் போலி முத்துக்கள் அல்ல என்று உனக்கு எப்படித் தெரியும்? உண்மையான திருட்டு ஏற்கனவே நடக்கவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?''

''ஓ!'' — என்றேன் பிரமிப்புடன்.

''ரைட்!''—என்றார் பாய்ராட் முகம் ஒளிர. ''நடந்ததை அடியிலிருந்து ஆராய்வோம்.''

அறையிலிருந்து வெளியே வந்தோம். யோசிப்பவர் போல் அவர் சிறிது நின்றார். பிறகு நடைபாதையின் ஒரு மூலைக்குப் போனார். ஒவ்வொரு பகுதியிலும் பணியாற்றும் அறை வேலைக்காரிகளும் வேலையாட்களும் கூடுகின்ற அறைக்கு வெளியே நின்றார். மிஸஸ் ஒபல்சனின் அறை வேலைக்காரி அங்கே ஒரு சிறிய சபையே கூட்டியிருந்தாள்; தன்னுடைய சமீபத்து அனுபவத்தை அவள் விவரிக்க, மற்றவர்கள் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவள் ஒரு வாக்கியத்துக்கு இடையில் நிறுத்தினாள். பாய்ராட் வழக்கப்படி பணிவாய்க் குனிந்தார்.

''தொந்தரவு செய்வதற்காக மன்னிக்க வேண்டும். ஆனால் மிஸ்டர் ஒபல்சன் அறையை எனக்குத் திறந்து விட்டால் மிகவும் நன்றி உள்ளவனாய் இருப்பேன்.''

அவள் உடனே எழுந்தாள். அவளோடு மறுபடியும் வந்த வழியே நடந்தோம்.

ஒபல்சனின் அறை நடை பாதைக்கு மறுபுறம் இருந்தது. அதன் கதவு அவருடைய மனைவியின் அறையை நோக்கி இருந்தது. அறை வேலைக்காரி தன்னிடமிருந்த பொதுச் சாவியை எடுத்து அதைத் திறந்தாள். நாங்கள் உள்ளே போனோம்.

அவள் வெளியே புறப்பட்டபோது பாய்ராட் அவளைத் தடுத்தார்.

''ஒரு வினாடி. மிஸ்டர் ஒபல்சனின் சாமான்களுக்கு இடையில் இது மாதிரி ஒரு கார்டு பார்த்திருக்கிறாயா?''

அவர் ஒரு சாதா வெள்ளைக் கார்டை அவளிடம் நீட்டினார். நல்ல கிளேஸ் உள்ள கார்டு; பார்ப்பதற்கும் சாதாரணமாக இல்லை.

''இல்லை சார்; பார்த்ததாக எனக்கு நினைவில்லை. ஆனால் வேலைக்காரன்தான் ஆடவர்களின் அறைகளைக் கவனிப்பது வழக்கம்.''

''அப்படியா? தாங்க்ஸ்.''

பாய்ராட் கார்டை வாங்கிக் கொண்டார். அவள் போய்விட்டாள். பாய்ராட் சற்று நேரம் யோசித்தார். பிறகு தலையை மெல்ல அசைத்தார்.

''ஹேஸ்டிங்ஸ்! தயவு செய்து மணி அடி, மூன்று முறை — வேலைக்காரனைக் கூப்பிட.''

நான் மூன்று முறை மணி அடித்தேன், ஆவல் மீதூற.—அதற்குள் பாய்ராட் தரையில் இருந்த குப்பைக் கூடையைக் கவிழ்த்துக் கொட்டி அதிலிருந்தவற்றை வேகமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சில விநாடிகளில் வேலைக்காரன் வந்து சேர்ந்தான். அவனிடமும் கார்டு தந்து அதே கேள்வியைக் கேட்டார். ஒபல்சனின் சாமான்களுக்கு இடையில் இம்மாதிரிக் கார்டு பார்த்ததில்லை என்று அவனும் சொன்னான். பாய்ராட் நன்றி செலுத்தினார். அவன் போய் விட்டான்.

கவிழ்த்திருந்த குப்பைக் கூடையையும், கீழே கிடந்த குப்பைகளையும் தயக்கத்துடன் பார்த்தவாறு மனமில்லாமல் அவன் வெளியேறினான். வெளியேறும்போது பாய்ராட்

நீச்சல் மன்னர்
நகைச்சுவை மன்னரைச் சந்தித்தபோது...

"நீச்சலடிப்பதில் முக்கியமான விஷயம் என்ன?" என்று பாப்ஹோப் கேட்டபோது ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டிகளில் ஏழு தங்க மெடல்கள் வாங்கிய ஸ்பிட்ஸ் அளித்த பதில்: "நீரில் எப்படி முழுகாமலிருப்பது."

டைம் - 'பாலி'

கூறிய சொற்களை அவன் கேட்காமல் இருந்திருக்க முடியாது.

"நெக்லேஸ் பெரிய தொகைக்கு இன்ஷ்யூர் செய்யப் பட்டிருந்தது..."

"பாய்ராட்! எனக்குத் தெரியும்!" என்று நான் கத்தினேன்.

"நண்பா, உனக்கு ஒன்றும் தெரியாது" என்றார் பாய்ராட்: "வழக்கம்போல் ஒன்றுமே தெரியாது — நம்பவே முடியவில்லை — ஆனால் நடந்திருக்கிறது. வா, நம் அறைக்குத் திரும்பலாம்."

மௌனமாய்த் திரும்பினோம். அங்கே போனதும் பாய்ராட் மிக விரைவாக உடை மாற்றிக் கொண்டதைக் காண எனக்கு வியப்பாக இருந்தது.

"லண்டனுக்குப் போகிறேன்; மிக அவசரம்" என்றார் அவர்.

"ஏன்?"

"அவசியம் போக வேண்டும். உண்மையான வேலை - மூளையின் வேலை - முடிந்து விட்டது. முடிவு அது சரிதானா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும்; நெக்லேஸ் கட்டாயம் கிடைக்கும்! ஹெர்க்யூல் பாய்ராடை ஏமாற்ற முடியாது!"

அவருடைய அகம்பாவத்தால் சற்று அலுப்புற்ற நான், "உங்களுக்கு ஒரு நாள் பைத்தியம் பிடிக்கப் போகிறது!" என்றேன்.

"நண்பா! கோபித்துக் கொள்ளாதே. நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நண்பனை உன்னையே நம்பியிருக்கிறேன்."

"என்ன செய்ய வேண்டும்?" என்றேன் ஆவலுடன்.

"என் கோட்டின் — நான் இப்போது கழற்றின கோட்டின் கைகளைத் தூசுபோக 'பிரஷ்' செய்கிறாயா? பார், வெள்ளைப் பொடி அதில் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. அலங்கார மேஜையின் டிராயரை விரல்களால் துழாவினேனே, பார்த்தாயல்லவா?"

"இல்லை."

"என் செய்கைகளை நீ கவனிக்க வேண்டும், நண்பா! என் விரலில் பொடி ஒட்டிக்கொண்டது அதனால்தான். கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு அதைக் கோட் கையில் துடைத்து விட்டேன். ஒழுங்கு தவறிய வேலை. அப்படிச் செய்ததற்காக வருந்துகிறேன். சாதாரணமாக நான் அப்படி நிதானம் இழப்பதில்லை."

"என்ன பொடி அது?" என்று கேட்டேன் பரபரப்புடன்.

"விஷம் அல்ல" என்றார் பாய்ராட், கண்களைச் சிமிட்டி. "உன்னுடைய கற்பனை சிறகடித்துப் பறப்பதைப் பார்க்கிறேன். அந்தப் பொடி பிரஞ்ச்சாக்."

"பிரஞ்ச்சாக் பொடியா?"

"பெட்டி செய்கிறவர்கள், டிராயர்கள் சுலபமாக நகருவதற்காக அதைப் பயன்படுத்துகிறார்கள்."

சிரித்தேன். "பொல்லாதவர்! பரபரப்பான செய்தி சொல்லப் போகிறீர்கள் என்று எதிர்பார்த்தேன்!"

"போய் வருகிறேன், நண்பா! உன் கோபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்கிறேன். பறந்து போகிறேன்!"

அவருக்குப் பின்னால் கதவு மூடிக்கொண்டது. ஏளனத்தோடும் அன்போடும் புன்னகை செய்தவாறு நான் அவருடைய கோட்டை எடுத்துக் கொண்டு பிரஷ்ஷை எடுக்கக் கையை நீட்டினேன்.

* * *

மறுநாள் காலையில் பாய்ராடிடமிருந்து தகவல் ஒன்றும் வராததால் வெளியே காற்றாடப் போனேன். சில பழைய நண்பர்களைச் சந்தித்து, அவர்களோடு சிற்றுண்டி அருந்திவிட்டு, அவர்களுடைய ஹோட்டலிலேயே தங்கிவிட்டேன். பிற்பகலில், காரில் ஊர் சுற்றப் போனோம். ஒரு டயர் பொத்துக்கொண்டதால் திரும்புவதற்குத் தாமதமாகி நான் கிராண்ட் மெட்ரோபாலிடனுக்கு வரும்போது எட்டு மணிக்கு மேலாகி விட்டது.

நான் கண்ட முதல் காட்சி: மகிழ்ச்சியால் பூரித்த ஒபல்சன் தம்பதி இருவருக்கும் மத்தியில் வழக்கத்தை விடச் சிறுத்து விட்டதாய்த் தோன்றிய பாய்ராட் உட்கார்ந்திருந்தார்.

"என் நண்பா, ஹேஸ்டிங்ஸ்!" என்று உரக்கச் சொல்லியபடி அவர் பாய்ந்து வந்தார். "என்னைக் கட்டிக் கொள். எல்லாம் அற்புதமாக முடிந்து விட்டன!"

பாய்ராட் கட்டிக்கொள்ளச் சொல்வது அணியான பேச்சுதான்; அவர் என்னைச் சாதாரணமாகக் கட்டித் தழுவுவதில்லை.

"அதாவது..." என்று தொடங்கினேன்.

"நான் அதை அற்புதம் என்பேன்!" என்றாள் மிஸஸ் ஒப்ல்சன். அவளுடைய பருத்த முகம் முழுதும் புன்னகையால் மலர்ச்சியுற்றது: "எட், என் முத்துக்களைப் பாய்ராட்டைத் தவிர வேறு யாராலும் மீட்டுத் தர முடியாது என்று சொன்னேனா, இல்லையா?"

"சொன்னாய், அன்பே, சொன்னாய். நீ சொன்னது ரொம்ப சரி."

ஒன்றும் விளங்காமல் திகைத்துப் பாய்ராடைப் பார்த்தேன்.

"என் நண்பன் ஹேஸ்டிங்ஸ், நீங்கள் இங்லாந்தில் பேச்சுவழக்கில் சொல்வது போல்

கடற்கரையில் இருக்கிறான்—அதாவது குழம்பியிருக்கிறான். நண்பா! உட்கார். இவ்வளவு மகிழ்ச்சியாக முடிவுற்ற விவகாரம் பற்றி முழுதும் சொல்லுகிறேன்.''

''முடிந்த விவகாரமா?''

''ஆம். அவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்கள்.''

''எவர்கள் கைது செய்யப்பட்டார்கள்?''

''அறை வேலைக்காரியும் வேலைக்காரனும் தான்! உனக்குச் சந்தேகம் உண்டாகவே இல்லையா? பிரஞ்ச்சாக்கைப் பற்றிச் சொல்லி விட்டுப் பிரிந்த பிறகும் உனக்குச் சந்தேகம் உண்டாகவில்லையா?''

''பெட்டி செய்கிறவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதாய்ச் சொன்னீர்கள்.''

''ஆம், டிராயர்கள் சுலுவாய் முன்னும் பின்னும் நகருவதற்காக அவர்கள் பிரஞ்ச் சாக் பொடியைப் பயன்படுத்துகிறார்கள். அந்த அடுக்கு டிராயர் பெட்டியின் கீழ் டிராயர் சத்தம் இல்லாமல் நகர வேண்டும் என்று யாரோ விரும்பியிருக்கிறார்கள். அது யாராக இருக்கும்? அறை வேலைக்காரியாகத் தான் இருக்க முடியும் என்று தெளிவாய்த் தெரிகிறதே. மிகவும் கெட்டிக்காரத்தமான திட்டம் — ஹெர்க்யூல் பாய்ராட்டின் கண்களுக்குக் கூட அது பார்த்த உடனே புலப்பட்டுவிடவில்லை!

''கவனமாய்க் கேள். அவர்கள் எப்படித் திருடினார்கள் என்று சொல்கிறேன்.

''வேலைக்காரன் காலியான பக்கத்து அறையில் காத்திருக்கிறான். செலஸ்டின் அறையிலிருந்து வெளியே போகிறாள். மின்னல் வேகத்தில் அறை வேலைக்காரி டிராயரைத் திறக்கிறாள், நகைப் பெட்டியை எடுக்கிறாள், டிராயரை மூடிவிட்டு, நகைப் பெட்டியைப் பக்கத்து அறையில் உள்ள வேலைக்காரனிடம் தந்துவிடுகிறாள். வேலைக்காரன் முன்பே திருட்டுச் சாவி தயாரித்து வைத்திருக்கிறான்; அவன் அதைக் கொண்டு நகைப் பெட்டியை மெதுவாய்த் திறக்கிறான்; முத்துமாலையை எடுத்துக்கொண்டு நகைப் பெட்டியை முன்போலப் பூட்டிவிட்டுக் காத்திருக்கிறான். செலஸ்டின் மறுபடியும் அறையிலிருந்து வெளியே போகிறாள். உடனே .....விர்ர்ர்ர்ர்ர்!... நகைப் பெட்டியை அறை வேலைக்காரி வாங்கி மறுபடியும் டிராயரில் வைத்து விடுகிறாள். — எல்லாம் ஒரு நொடியில்!

''மிஸஸ் ஒபல்சன் அறைக்கு வருகிறாள். திருட்டு வெளிப்படுகிறது. அறை வேலைக்காரி சோதனை செய்யப்படுகிறாள். அவள் ஒரு பாவமும் அறியாதவள் என்ற நல்ல பெயரோடு அறையிலிருந்து வெளியே போகிறாள். போலி முத்து மாலையை அவர்கள் முன்பே தயாரித்து வைத்திருக்கிறார்கள். அறை வேலைக்காரி பிரஞ்சுப் பெண்ணின் படுக்கையடியில் காலையிலேயே பதுக்கி வைத்து விட்டாள்.—திட்டத்தில் மேதாவித்தனமான அம்சம் இது தான்! ஆ!''

''ஆனால், நீங்கள் ஏன் லண்டனுக்குப் போனீர்கள்?'' என்று கேட்டேன்.

''கார்டு காட்டினேனே நினைவிருக்கிறதா?''

''இருக்கிறது. அது அப்போதும் குழப்பியது; இப்போதும் என்னைக் குழப்புகிறது...''

நான் மிஸ்டர் ஒபல்சனைப் பார்த்துத் தயங்கினேன்.

பாய்ராட் மனமாரச் சிரித்தார்.

''ஒரு தந்திரம்! வேலைக்காரனுக்காக... கைரேகை நன்றாகப் பதியும்படி தயாரிக்கப்பட்ட கார்டு அது. அதை எடுத்துக்கொண்டு நான் நேரே ஸ்காட்லாண்ட் யார்டுக்குப் போனேன். நம்முடைய பழைய நண்பர்-இன்ஸ்பெக்டர் ஜாப்பைத் தேடிப் பிடித்து எல்லா விவரங்களும் சொன்னேன். நான் சந்தேகப்பட்டது சரிதான்; இரண்டு கை ரேகைப் பதிவுகளும், இரண்டு பிரபல நகைத் திருடர்களுடையவை. சிறிது காலமாய்ப் போலீஸ் அவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது. ஜாப் என்னோடு வந்தார். திருடர்கள் கைது செய்யப்பட்டார்கள். முத்துக்கள் வேலைக்காரனிடம் இருந்தன. புத்திசாலியான ஜோடி! ஆனால் ஒழுங்கு இல்லாததால் தோல்வி அடைந்தார்கள்... ஹேஸ்டிங்ஸ்! குறைந்தபட்சம் நூறு தடவைகளாவது சொல்லியிருப்பேனே, ஒழுங்குமுறை இல்லாமல்...''

நான் குறுக்கிட்டுக் கேட்டேன்: ''ஆனால், அவர்களுடைய ஒழுங்குமுறை எங்கே தவறியது?''

''என் நண்பா, அறை வேலைக்காரியாகவும் வேலைக்காரனாகவும் ஓரிடத்தில் வேலைக்குச் சேருவது நல்ல பிளான். ஆனால், வேலையில் கவனக் குறைவாக இருக்கக் கூடாது. காலியான ஓர் அறையை அவர்கள் தூசி போகத் துப்புரவு செய்யவில்லை. அதனால், அவன் இரு அறைகளை இணைக்கும் கதவுக்குப் பக்கத்தில் உள்ள சின்ன மேஜையின்மீது நகைப் பெட்டியை வைத்தபோது சதுரமான அடையாளம் பதிந்தது...''

''ஞாபகம் இருக்கிறது!'' என்று கத்தினேன்.

''அதற்கு முன்பு என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் இருந்தது. தூசியில் படிந்த பெட்டிக் குறியைப் பார்த்ததும், எனக்கு உண்மை தெரிந்து விட்டது!''

ஒரு விநாடி மௌனம் நிலவியது.

''எனக்கு என் முத்துக்கள் திரும்பக் கிடைத்து விட்டன!'' — என்றாள் மிஸஸ் ஒபல்சன் குதூகலத்துடன்.

''சரி, சாப்பிடப்போகலாமா?'' என்றேன்.

பாய்ராட் என்னோடு வந்தார்.

''உங்களுக்கு இது மற்றொரு புகழாரம்.''

பாய்ராட் அமைதியாகச் சொன்னார்: ''எனக்குப் புகழாரமா? இன்ஸ்பெக்டர் ஜாப்பும், உள்ளூர் இன்ஸ்பெக்டரும் களவைக் கண்டுபிடித்த புகழைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வார்கள். ஆனால்...'' என்று அவர் தம் பையைத் தட்டிக் காட்டினார்: ''மிஸ்டர் ஒபல்சன் கொடுத்த ஒரு செக் இங்கே இருக்கிறது. நண்பா, இந்த வார இறுதி நாம் திட்டமிட்டபடி கழியவில்லை. அடுத்த வார இறுதியில் இங்கே வருவோமா? செலவு என் பக்கம்... என்ன சொல்கிறாய்?''

COMICS PDF TIMES

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam